# பொதுக்காலம் 26ஆம் வாரம் - ஞாயிறு

# மூன்றாம் ஆண்டு

## திருப்பலி முன்னுரை

இவ்வுலகில் நாம் பெற்றிருக்கும் செல்வத்தைப் பயன்படுத்தி விண்ணக வாழ்வை சம்பாதித்துக் கொள்ள பொதுக் காலம் 26ம் ஞாயிறு திருப்பலி கொண்டாட்டத்திற்கு அழைக்கப்பட்ட அன்புள்ளங்களை வரவேற்கிறோம். இறைவனுக்கும் நமக்கும் இடையே செல்வம், பணம் என்னும் சுவரை எழுப்பி அவரைக் காண வாய்ப்பில்லை எனக் கூறிக் கொள்ளாமல் தடையை தகர்த்து விட்டு, இறை முகம் கண்டு இனிய வாழ்வைப் பெறுவோம்.

இன்றைய முதல் வாசகத்தில் ஏழை, பணக்காரர் என்னும் வேறுபாட்டால் இஸ்ரயேல் மக்களுக்கு ஏற்பட்ட கொடுமைகளை ஆமோஸ் இறைவாக்கினர் கூறுகிறார். பல்வேறு உணவு வகைகளில் எதை உண்பது எனக்கு குழப்பமடையும் மனிதனும் அடுத்த வேளைக்கு ஏது உணவு என ஏங்குபவனும் ஒரே சமுதாயத்தில் தான் வாழ்க்கையை மேற்கொள்ள வேண்டியிருக்கிறது. அன்று மட்டும் அல்ல, இன்றும் தான்.

மீண்டும் பசி எடுக்க மருந்தைத் தேடுகிறான் வல்லவன்

பசி ஏற்படாமல் இருக்க மருந்தைத் தேடுகிறான் வறியவன்.

இன்றைய நற்செய்தி வாசகத்தில் ஆபிரகாமின் மடியில் அமர்ந்திருந்த இலாசரைப் பற்றி கூறுகிறார் இயேசு. இவ்வுலகில் துன்பங்களையே அனுபவித்தாலும் மறுவுலகில் இனிமையை இறைவன் தருவார். செல்வந்தன் மண்ணுலகில் தன் தேவைக்கு அதிகமான செல்வங்களை வைத்திருந்தான். அவனால் இலாசரின் வேதனையைக் குறைத்திருக்க முடியும். பணம் இருந்தும் மனம் வரவில்லை. இறந்து, விண்ணகத்தில் சென்று, அதனை உணர்ந்து தனது வேதனை பிறருக்கு வேண்டாம் என்ற நன் மனது ஏற்படுகிறது. இவ்வுலகில் வாழும் போதே இறைவாக்கிற்கும் சட்டத்திற்கும் செவிமடுப்போர் நீடித்து வாழ்வர். இந்த சிந்தனைகளை மனதில் கொண்டு இப்பலியில் இணைவோம்.

## மன்றாட்டுக்கள்

***பதில்: எல்லாம் வல்ல இறைவா, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.***

1. விண்ணக மறு வாழ்வைப் பெற்றுக் கொள்ள அழைப்பவரே எம் இறைவா!

எம் திரு அவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் தங்களின் அழைப்பின் மேன்மையை உணர்ந்து, இறைவாக்கின்படி நடந்து, மக்களை இறைப்பாதையில் வழிநடத்தும் வரமருள வேண்டும் என ஆண்டவரை மன்றாடுவோமாக.

2. செல்வத்தின் மீது பற்றற்றவர்களாய் வாழுங்கள் என அழைப்பவரே!

எம்நாட்டை ஆளும் ஆட்சியாளர்கள் செல்வத்தைச் சேர்க்கும் தொழிலாக கருதாமல், முழுமையான சேவை உள்ளம் கொண்டவர்களாய் நாட்டை வளர்ச்சிப் பாதையில் வழிநடத்தவும், மக்களுக்கு நன்மை பயக்கும் திட்டங்களை செயல்படுத்தவும், பொருளாதார முன்னேற்றம் அடைய தேவையான திட்டங்களை செயல்படுத்த ஞானம் தரவேண்டும் என ஆண்டவரை மன்றாடுவோமாக.

3. இலாசரின் வேதனையை நினைவுறுத்துபவரே!

எங்கள் பகுதியில் இலாசரைப் போன்று வேதனையிலும், நோயிலும், வறுமையிலும், வாடுபவர்களை காணும் நாங்கள், அவர்களுக்கு இரங்கி, கண்ணீர் துடைக்க எங்கள் கரங்கள் முன்வர தாராள உள்ளத்தைத் தர வேண்டும் என ஆண்டவரை மன்றாடுவோமாக.

4. நலன்களால் எம்மை நிரப்புபவரே எம் இறைவா!

எம் பகுதியில் போதிய மழை பொழியவும், விவசாயம் சிறக்கவும், குடும்ப அமைதி, மகிழ்ச்சி பெருகவும், படிக்கும் மாணவர்கள் கல்வி, ஞானம், ஒழுக்கத்தில் சிறந்து விளங்கவும், திருமணம், குழந்தை வரம் வேண்டுவோர் உம் அருளால் பெற்று நிறைவோடு வாழ வரமருள வேண்டும் என ஆண்டவரை மன்றாடுவோமாக.

**நன்றி: ஆசிரியை. திருமதி. ஜோஸ்பின் சாந்தா லாரன்ஸ், பாவூர்சத்திரம்.**

**“கடவுள் அன்பாய் இருக்கிறார்!” 1 யோவா 04: 16**

மறைத்திரு. அமிர்தராச சுந்தர் ஜா.

info.arulvakku@gmail.com; + 91 843 802 1938; www.arulvakku.com